# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2022.04.29 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

## விருப்பாவணங்கள் (திருத்தம்)

**(60 ஆம் அத்தியாயமான) விருப்பாவணக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

***வாசகம் 2*** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (60 ஆம் அத்தியாயமான) விருப்பாவணக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடு செய்வதுடன் மாற்றீடு செய்யப்பட்ட அப்பிரிவின் சட்டப்பயனானது, இறுதி விருப்பாவணமொன்றை ஆக்குவதுடன் தொடர்புடைய தேவைப்பாடுகளை குறித்துரைப்பதாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை நீக்குகின்றது.

***வாசகம் 4*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவை நீக்குகின்றது.

***வாசகம் 5*** : இவ்வாசகம், (முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப் பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது சொல்லப்பட்ட பிரிவின் நோக்கெல்லையை அதிகரிப்ப தாகும்.

***வாசகம் 6*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப் பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது சொல்லப்பட்ட பிரிவின் நோக்கெல்லையை அதிகரிப்ப தாகும்.

ச.வ.- ஓ. 49/2021

## (60 ஆம் அத்தியாயமான) விருப்பாவணக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2022ஆம் ஆண்டின் ஆம் இலக்க, விருப்பாவணங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (60 ஆம் அத்தியாயமான) விருப்பாவணக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:- 60 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

"விருப்பாவணம் ஒன்றின் மூலம் ஆவணத்தைக் கையுதிர்த்தல்

2. (1) பதினெட்டு வயதை அடைந்துள்ளவரும் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்றவருமான எவரேனுமாள், விருப்பாவண நன்கொடை அளிக்கப்படாவிடின், விருப்பாவண மெழுதிக் கையளிக்கபடாவிடின் அல்லது கையுதிர்க்கப்படாவிடின் அவர் தகுதியானதெனக் கருதக்கூடியவாறாக அவற்றை எடுப்பதிலிருந்து சட்டப்படி இயலாதவராக்கப்படாத அத்தகைய ஆளின் மரபுரிமையாளர்கள்மீது வந்தடையக்கூடிய வையும், அவருக்குச் சொந்தமான எவையேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களையும் ஏதேனும் ஆதனத்திலுள்ள எல்லா மற்றும் ஒவ்வொரு மரணச்சொத்து, உரிமை, பங்கு அல்லது அக்கறை என்பவற்றை விருப்பாவணமெழுதிக் கையளிக்கின்ற மற்றும் கையுதிர்க்கின்ற விருப்பாவண மொன்றை நிறைவேற்றுவது அவருக்குச் சட்டமுறை யானதாதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு மரணசாதனக்காரரும் அவர் கையுதிர்க்க விரும்பக்கூடியவாறு அத்தகைய மரண சாதன கையுதிர்ப்பை ஆக்குவதற்கும் அத்துடன் அத்தகைய உரிமையைப் பிரயோகிக்கையில், இப்போது அல்லது இதுகாலவரையில் இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்துக்கு, பயன்பாடுக்கு அல்லது வழக்காற்றுக்கு முரணாக எது எவ்வாறிருப் பினும் எவரேனும் பிள்ளையை, பெற்றோரை, உறவினரை அல்லது வழியுரிமையாளரை தவிர்ப்பதற்கான, வழியுரிமையை இல்லாதாக்குவதற் கான அல்லது விட்டுவிடுவதற்கான அல்லது அத்தகைய தவிர்ப்புக்கான ஏதேனும் காரணத்தைக் குறித்தளிக்காமல் தவிர்த்து விடுவதற்கும் முழுமை யான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:

ஆயின், இதன்கண் அடங்கியுள்ளது எதுவும், எவரேனும் மரணசாதனக்காரர் விருப்பாவணம் மூலம் அவரது வாழ்க்கைத்துணையின் ஏதேனும் ஆதனத்தை அல்லது மரணச்சொத்தைக் கையுதிர்ப்பதனை அதிகாரமளிப்பதற்கு அல்லது அவரை உரித்துடையராக்குவதற்கு அல்லது இக்கட்டளைச் சட்டம் நிறைவேற்றப்பட்டிராது இருந்திருப்பின் அத்தகைய வாழக்கைத்துணை எந்த ஆதனத்துக்கு அல்லது மரணச்சொத்துக்கு அல்லது ஆயுள் நலவுரித்துக்கு உரித்துடையவராக இருந்திருப்பாரோ அந்த ஏதேனும் ஆதனத்தில் அத்தகைய வாழ்க்கைத்துணையின் ஏதேனும் ஆயுள் அல்லது வேறு அத்தகைய நலவுரித்தைத் தவிர்ப்பதற்கு அல்லது இழக்கச் செய்வதற்கு நீடித்தலோ அல்லது நீடிப்பதாகப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலோ ஆகாது.".

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது. *முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை நீக்குதல்*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவை நீக்குதல்*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை, அதன் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) கூட்டு இறுதிவிருப்பாவணமொன்றில் மரண சாதனக்காரர் ஒருவர் இறப்பதன்மேல், மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மரணசாதனத்துடன் இணைத்து மரணசாதன அதிகாரப்பத்திரத்தை அல்லது நிருவாகத் தத்துவப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு, விடயத்துக்கேற்ப, (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் அத்தியாயம் XXXVIII அல்லது அத்தியாயம் XXXVIIIஆ இன்கீழ் மரணசாதன வழக்குநடவடிக்கைகள் தொடுக்கப்படுதல் வேண்டும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவிலுள்ள, "அதன்மீது நிறுவப்பட்ட கட்டிடங்கள், அத்துடன் எனும் சொற்களுக்குப் பதிலாக, "அதன்மீது நிறுவப்பட்ட கட்டிடங்கள், கூட்டாட்சியாதனச் சிறுகூறு அல்லது ஏதேனும் காணிச் சிறுகூறு, அத்துடன்" எனும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**7**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.